**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 162** **நாள் : 28.09.2024**

**வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 30.09.2024 அன்று முதல் மறுஉத்தரவு பிறப்பிக்கும் வரை சேவைத்துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டுகள் நிறுத்தி வைக்கப்படுகிறது என ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் 15 வரையிலான பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளில் பல்வேறு சேவை துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை வெட்டுகள் அனைத்தும் 30.09.2024 அன்று முதல் மறுஉத்தரவு பிறப்பிக்கும் வரை நிறுத்தி வைக்கப்படுகிறது.

இதுகுறித்து அனைத்து சேவைத் துறைகளுக்கும் சாலை வெட்டுப் பணியை 30.09.2024 அன்று முதல் மறுஉத்தரவு பிறப்பிக்கும் வரை நிறுத்தி வைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இக்காலங்களில் அவசரத் தேவைகளுக்கு மட்டும் சாலை வெட்டுப் பணிகளை மேற்கொள்ள துணை ஆணையர் (பணிகள்), வட்டார துணை ஆணையர்கள் (வடக்கு, மத்தியம், தெற்கு) அவர்களின் மூலமாக ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே அனுமதி அளிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**